இயக்கவூர்தி விபத்து கோரிக்கை தீர்ப்பாயம், நாகப்பட்டினம்
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.

**MCOP.No.364/2024 ம.சா.** 2

பெயர். திரு. டேவிட் அலக்சாண்டர் த/பெ. அந்தோணிராஜ்

கிராமம். நாகப்பட்டினம் Age: 43

நாள். 18.04.2026 தொழில். மீன்பிடித்தொழில்

நம்பர். 98943 77765

**2026 –**ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் **18–**ந்தேதி **சனிக்கிழமை** Act X of 1973 ஆண்டின் சட்ட விதிப்படி **திரு. G. கிருஷ்ணன், பி.ஏ., எல்எல்.பி.,** தலைமை நீதித்துறை நடுவர் நாகப்பட்டினம், ஆகிய என் முன்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் 3ம் நபர் ஆவேன். நான் எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் உண்மை என கூறப்பட்டவைதான். எனவே நான் தாக்கல் செய்த முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணை சாட்சியமாக பாவித்துக்கொள்ள வேண்டுகிறேன். வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு **மனுதாரர் தரப்பு சாட்சி தாக்கல்** செய்த முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலம் **மசா.2ன்** முதல் விசாரணையாக அனுமதிக்கப்படுகிறது.

1ம் **எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

எனது வீட்டிலிருந்து மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தானது, சுமார் எவ்வளவு மீட்டர் தூரத்தில் ஏற்பட்டது ? என்றால் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் ஏற்பட்டது. மனுதாரர் சாம் ஐசக் எனது உறவினர் என்று சொன்னால் சரியல்ல.

நான் முதல் விசாரணையாக தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல, மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தை கண்ணுறவில்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஏற்பட்ட விபத்தை கண்ணுறாமலேயே, கண்ணுற்றதுபோல தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.** இல்லை.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

மனுதாரர் என்னிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மனுதாரருக்கு அதிக இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
Date: 2026.04.18 09:30:34 +0530